சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 16.08.2023

SC.NO. 197/2022

PW 5: திரு.சரவணன் (வயது 35) த/பெ. சின்னையன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் திருமங்கலம் மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்பந்ததாரிடம் மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 வரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் ஊரை சேர்ந்த ஜெயலெட்சுமியை தெரியும். 2022 வருடம், தேதி ஞாபகம் இல்லை, மாதம் ஞாபகம் இல்லை ராமச்சந்திரனுக்கும் , ஆஜர் எதிரிக்கும் தகராறு ஏற்பட்டதாக கேள்விபட்டேன். சம்பவத்திற்கு மறு நாள் காலை 8 மணியளவில் எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் தெருவில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த ஜெயலெட்சுமியும் நின்று கொண்டிருந்தோம். அங்கு வந்த போலிசார் சாட்சியாக இருக்கும் படி கேட்டு கொண்டு என்னிடமும் , ஜெயலெட்சுமியிடமும் கையெழுத்து கேட்டார்கள் நாங்களும் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்ட முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த சாட்சி கையெழுத்து மட்டும்

அ.த.சா.ஆ.2 / அ.சா. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி போக அனுமதி வேண்டப்பட்டு நீதியின் நலன் கருதி அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

25.04.2022ம்தேதி இரவு 10 மணி அளவில் எங்கள் தெருவை சேர்ந்த முத்தையன் மகன் ராமச்சந்திரன் என்பவருக்கும் மணி கண்டன் மகன் ரஞ்சித்குமார் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டு ரஞ்சித் குமார் ராமச்சந்திரனையும் அவரது மகன் ஜெகனையும்அருவாளல் வெட்டியதில் இருவருக்கும் காயம் ஏற்பட்டு , இருவரும் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து வந்ததாகவும் 26.04.2022ம் தேதி காலை 8 மணியளவில் சண்டை சம்மந்தமாக எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் முன்பு விசாரணை செய்து கொண்டிருந்த இலால்குடி போலிசார் மாரியம்மன் கோவில் வழியாக வந்த என்னையும் அருகில் நின்று கொண்டிருந்த ஜெயலெட்சுமி என்பவரையும் அழைத்து ராமச்சந்திரன் திருச்சி அரசு மருத்துவமனயில் இருந்து கொண்டு ரஞ்சித் குமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்திருப்பதாகவும் அதன் பேரில் இலால்குடி போலிசார் வழக்கு பதிவு செய்து வழக்கு சம்மந்தமாக சம்ப வஇடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் செய்ய போவதாகவும் கூறியதாகவும், அதற்கு எங்களை இருவரையும் சாட்சிகளாக இருக்குமாறு கேட்டு கொண்டதன் பேரில் நானும் ஜெயலெட்சுமியும் சம்மதம் தெரிவித்ததாகவும் பின்னர் இலால்குடி போலிசார் எங்கள் முன்னிலையில் சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் நானும் ஜெயலெட்சுமியும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும் , போலிஸ்

விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான் . போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் தான் சம்பவ இடத்தில் கையெழுத்து போட்டேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

/signed/
சரவணன்

/signed/
திரு.S.விஜயகுமார், M.A., M.L.,
சார்பு நீதிபதி, இலால்குடி.